சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.24/2019

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உமாமகேஷ்வரி | வயது | 40 |
| க/பெ | சண்முகம் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரேகவுண்டன்புதூர், | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | இல்லத்தரசி |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

க.ச.எண்.295/5 என்பது எனது மாமனாருக்கு பாகப் பிரிவினையில் வாழ்நாள் உரிமையாக கிடைத்த சொத்து என்றால் சரி தான். அந்த சொத்திற்கு அருகில் எனது மாமனாருக்கு அவரது அப்பா மூலமாக வந்த புல எண். 301/4 மற்றும் 305/3 ஆகிய சொத்துக்கள் உள்ளன என்றால் சரி தான். புல எண். 301/4 மற்றும் 305/3 என்ற சொத்துக்களில் தான் எனது கொழுந்தனாரான 3 ம் பிரதிவாதி கணேசன், 6 ம் பிரதிவாதி நிறுவனத்தை வைத்து தொழில் செய்து வந்தார் என்றால் அந்த நிறுவனம் கூட்டுக் குடும்பமாக இருந்த போது ஆரம்பித்தது. இன்று வரை 6 ம் பிரதிவாதி நிறுவனத்தை 3 ம் பிரதிவாதி தான் நடத்தி வருகிறார் என்றால் கூட்டுக் குடும்பமாக இருந்த போது எனது கணவரும், 3 ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் ஆரம்பித்தார்கள். Proprietor ஆக 3 ம் பிரதிவாதி தன்னை போட்டுக் கொண்டு ஏமாற்றி விட்டார். 4 ம் பிரதிவாதி நிறுவனத்தை எனது கணவர் ஆரம்பித்தார் என்றால் எனது கணவரும், எனது மாமனாரும் சேர்ந்து

ஆரம்பித்தார்கள். அதற்கும், 3 ம் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரி தான். 4 ம் பிரதிவாதி நிறுவனத்தை எனது கணவர் ஆரம்பித்தது போல 6 ம் பிரதிவாதி நிறுவனத்தை 3 ம் பிரதிவாதி ஆரம்பித்தார் என்றும், அதில் எனது கணவருக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. புல எண். 307/2 சி ல் தான் 4 ம் பிரதிவாதி நிறுவனம் உள்ளது என்றும், அந்த சொத்து தான் எனது மாமனாருக்கு வாழ்நாள் பாத்தியம் வழங்கப்பட்ட சொத்து என்றால் சரி தான். அந்த சொத்து இன்று வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரி தான். 3 ம் பிரதிவாதி நடத்தி வந்த 6 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு புல எண். 295/5 ல் இருந்த பூமி தேவைப்பட்டதால் 1 ம் பிரதிவாதியிடமிருந்து 3 ம் பிரதிவாதி குத்தகைக்கு எடுத்தார் என்றால் சரியல்ல. இன்று வரை புல எண். 295/5 3 ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்றால் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். ஆனால் தற்போது ஒரு வருடமாக அந்த சொத்திற்குள் 3 ம் பிரதிவாதி எங்களை விட மறுக்கிறார். வட மாநிலத்தவர்களை வைத்து எங்களை அடிக்கிறார். ஒரு வருடத்திற்கு முன்பு வரை நானும், எனது கணவரும் விவசாயப் பணிகளை செய்து வந்தோம் என்றால் சரி தான்.

(இரு தரப்பிற்கும் சமரச பேச்சு வார்த்தை இருப்பதால், நீதியின் நலனை கருத்தில் கொண்டு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

Sd/- G. Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.